<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>

<u>OS.192/2023</u>

<u>நாள்.12.03.2026</u>

**<u>வா.சா.1. 9 , 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

9ம் பிரதிவாதி வடுவம்மாள் தாவா சொத்து உள்ள கிராமத்தில் தான் வசித்து வருகிறார். 9ம் பிரதிவாதி எனது தந்தையின் உடன் பிறந்த அண்ணன் மகள். 9ம் பிரதிவாதி பிறந்ததிலிருந்து வடசங்கேந்தி தற்போது வரை அதே ஊரில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 9ம் பிரதிவாதி அதே ஊரில் பிறந்து அதே ஊரில் வளர்ந்து வசித்து வருவதால் எனது குடும்ப விவரங்கள் அனைத்தும் தெரியுமா என்று சொன்னால் அனைத்து விவரங்களும் தெரியுமா என்று எனக்கு தெரியாது. 9ம் பிரதிவாதி அதே ஊரில் வசித்து வருவதால் எங்கள் குடும்ப விவரங்கள் அனைத்தும் நன்றாக தெரியும் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக 9ம் பிரதிவாதிக்கு எங்கள் குடும்ப விவரங்கள் அனைத்தும் தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு திருமணம் எப்போது திருமணம் நடைப்பெற்றது என்றால் 1987–ல். எனக்கு திருமணத்தின்போது சீர்வரிசைகள் செய்து தான் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சீர்வரிசைகள் ஏதும் செய்யவில்லை. 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு சொத்து கொடுத்தது போல் எனக்கும் சொத்து கொடுத்தார்கள் என்றால் எனக்கு எதுவும் கொடுக்கவில்லை. வடசங்கேந்தி கிராமத்தை சேர்ந்த

சபாபதி மகன் முருகேசன் என்பவருக்கு எனக்கு கொடுக்கப்பட்ட சொத்தினை விற்பனை கிரயம் சாசனம் செய்து பதிவு செய்து கொடுத்தேன் என்றால் செய்து கொடுத்தேன். அந்த சொத்தானது எனது பாட்டியான காசியம்மளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்து பின்னர் முருகேசன் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டோம். அந்த சொத்தினை எனது தகப்பனார் எப்போது எழுதிக்கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. மேற்படி சொத்தினை வாரிசு சான்றிதழ் பெற்று அதனடிப்படையில் எனக்கு எனது தந்தை எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.1ம் பிரதிவாதி வைரம் என்பவர் எனது தாயார். 4ம் பிரதிவாதி சுப்பையன் என் உடன் பிறந்த சகோதரர். ஆகிய இருவரும் அவர்களுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தினை இந்த 9ம் பிரதிவாதியான வடுவம்மாளுக்கு கிரய சாசனம் செய்து கொடுத்துள்ளனர். தாவா சொத்து விவரத்தில் உள்ள 4,5,6 அயிட்ட சொத்துக்களை 9ம் பிரதிவாதி வடுவம்மாளுக்கு 1 மற்றும் 4 பிரதிவாதிகள் கிரய சாசனம் செய்து கொடுத்ததாக கண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 4,5,6 அயிட்ட சொத்துக்களின் புல எண்கள் மற்றும் நான்கெல்லை விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் புல எண் தெரியாது. கிழக்கு மேற்கு பாசன வாய்க்கால், வடப்புறம் வயல், மேற்கு பக்கிரிசாமி, கிழக்கு ராமலிங்கம், வடக்குபுறம் குளம் என்பதுதான் இந்த 9ம் பிரதிவாதி கிரயம் பெற்ற 4,5,6 சொத்துகளின்

நான்கெல்லைகளாகும். நான் முருகேசன் என்பவருக்கு விற்பனை செய்த சொத்தினை சேர்க்கவில்லை என்று சொன்னால் அதற்கும், இதற்கும் சம்மந்தம் இல்லை. மேற்படி சொத்து பூர்விக சொத்து என்பதால் எனக்கு தனிப்பட்ட முறையில் கிரய சாசனம் செய்து கொடுக்க உரிமை இல்லை என்பதால் அந்த சொத்தினை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதியான காமராஜ்க்கு ராமாமிர்தம் அவர்கள் எங்கள் குடும்ப சொத்தினை எழுதிக்கொடுத்துள்ளார். அந்த சொத்தை இந்த வழக்கில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நிலம் கொடுத்த விவரம் தெரியும், எவ்வளவு விஸ்திரனம் என்று எனக்கு தெரியாது. 9ம் பிரதிவாதிக்கு 1 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு எனக்கு கிடைத்தது போல் அவர்களுக்கும் பாகமாக கிடைத்த சொத்தினை தான் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் ஏற்கனவே பாகமாக பிரித்து கொண்டது சரியல்ல என்பதால் தற்பொழுது சமவிகிதமாக பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவரஅவருக்கு ஏற்கனவே சொத்தை பிரித்து கொடுத்தனர் ஆனால் எப்படி பிரித்து கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. கிராமத்தில் உள்ள முக்கியஸ்தர்கள் மற்றும் உறவினர்கள் சேர்ந்து குடும்ப சொத்துக்களை பிரித்து அவரஅவர்கள் அனுபவம் செய்ய ஒப்புகொண்டு அதனடிபடையில் அனுபவம் செய்து வந்தார்கள். அதனடிப்படையில் தான் பட்டா மாற்றி

கொண்டார்கள் என்றால் அதைப்பற்றி தெரியாது. பட்டா மாற்றம் செய்தது தொடர்பாக வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் ஆகியோரிடம் மேல்முறையீடு செய்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 10ம் பிரதிவாதியான வீரகுமருக்கு 6ம் பிரதிவாதி சித்ராவுக்கு பாகமாக கிடைத்த சொத்தினை பதிவு செய்து கிரய சாசனம் செய்து கொடுத்தார்கள். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக 9ம் பிரதிவாதிக்கு 1, 4 பிரதிவாதிகள் கிரய சாசனம் செய்து பதிவு செய்து கொடுத்த நிலையில் இந்த 9ம் பிரதிவாதி கிரயம் பெற்ற நாளில் இருந்து தற்போது வரை அனுபவம் செய்து வருவதை இதுவரை ஆட்சேபனை செய்யவில்லை தற்போது தான் வழக்கிற்காக தவறான விவரங்களை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுடன் எனக்கு எந்த விதமான சண்டையோ, சச்சரவுகளோ கிடையாது. அனைவரிடமும் பார்த்தால் சித்திராவை தவிர மற்றவரிடம் பேசுவேன். தாவா சொத்துள்ள கிராமத்திற்கு நான் சென்று 30 வருடம் ஆகிறது. தாவா சொத்து உட்பட எங்கள் குடும்ப சொத்துக்கள் அனைத்தும் அவர்அவர்களுக்கு பாகமாக கொடுக்கப்பட்டு அவர்அவர்கள் 30 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருவதால் தான் தாவா சொத்து இருக்கும் கிராமத்திற்கு செல்லவோ, சொத்தினை பற்றி விவரங்களை தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 9 மற்றும் 10 பிரதிவாதிகள் 1, 4

பிரதிவாதிகள் மற்றும் 6ம் பிரதிவாதிக்கு பாகமாக கிடைத்த சொத்தினை முறையாக அனுபவம் செய்தும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் முறையாக கிரயம் பெற்று ஆவணங்கள் பதிவு செய்துவிட்டு சொத்தினை அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் ஏற்கனவே பாகம்பிரிக்கப்பட்டது சரியில்லை என்பதால் எனக்கு சரியாக பாகம் பிரிக்க வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.76/2024 என்ற வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 9ம் பிரதிவாதியை ஒரு தரப்பினராக சேர்த்தேனா என்றால் ஞாபகமில்லை பார்த்தால் தான் தெரியும். அ.வ.எண்.76/2024– என்ற வழக்கில் ஏற்கனவே எனது தகப்பனார் கோவிந்தராஜன் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் தவறு என்பதால் அதில் எனது பெயரை சேர்த்து வாரிசு சான்றிதழ் வழங்கும்படி பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 17.08.2012–ல் தான் வாரிசு சான்றிதழ் வாங்கியதாக மேற்படி அசல் வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 17.08.2012–ல் வழங்கிய வாரிசு சான்றிதழ் தவறு என சொல்லி வாரிசு சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியரின் மேலதிகாரியான வருவாய்கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கில் சொத்து விவரத்தில்

கண்டுள்ள சில சொத்துக்களை மட்டும் கண்டு அதில் ஏற்பட்ட ஆவணங்களை ரத்து செய்ய வேண்டும் என மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 76/2024 கண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. தாவா வழக்கில் சொத்து விவரத்தில் கண்ட 4,5,6 அயிட்ட சொத்துக்களை மேற்படி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.76/2024–ல் வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தில் மேற்படி சொத்துக்களை பொறுத்து எந்தவிதமான விவரங்களையும் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், அந்த வழக்கில் மேற்படி சொத்து சம்மந்தமாக ஏற்பட்ட ஆவணத்தினை ரத்து செய்ய வேண்டுமென எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் குறிப்பிட்ட காலத்திற்குள் பத்திரங்களை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்காததால் அந்த வழக்கில் 9ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தினை பொறுத்து பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.76/2024–ல் வழக்கில் கண்டுள்ள சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களையும் காமராஜ் என்பவருக்கு ராமாமிர்தம் செட்டில்மெண்ட் செய்து கொடுத்த சொத்துக்களையும் நான் கிரயம் செய்து கொடுத்த சொத்தினையும், இதர சொத்துக்களையும் குறிப்பிடாமல் பகுதியாக பாகபிரிவினை கோரி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளது என்பது தவறான வழக்காகும், அவ்வாறு

தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் இறந்த கோவிந்தராஜ்க்கு வாரிசு சான்றிதழ் இருக்கும் நிலையில் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முழுமையான விவரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் ஆன பாகவீதம் என்பது எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. ஒரே சொத்திற்கு நான் வாதியாக இருந்தும், இதே பிரதிவாதிகளுக்கு 2 நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 30.06.2021–ம் தேதி 9ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 20.07.2021–ல் 9ம் பிரதிவாதி தரப்பில் பதிலறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பதிலறிவிப்பில் கண்ட சங்கதிகள் உண்மை என்பதால் தான் பதிலறிவிப்பு கிடைத்து 2 வருடம் கழித்து பின்யோசனை இட்டு பிரதிவாதிகளை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் உண்மை சம்பவங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2 ஆண்டுகளுக்கு உண்டான காலதாமத்திற்கான காரணங்களை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வருவதால் வழக்கறிஞரை சந்தித்து உடனடியாக வழக்கு தாக்கல் செய்யமுடியவில்லை.

நான் குடும்ப சொத்துக்களை பற்றி முழு விவரங்களை மறைத்தும், ஏற்கனவே பாகப்பிரிவினை செய்து அவரஅவர்கள் அனுபவித்தும், விற்பனை செய்தும், நானும் விற்பனை செய்தும் உள்ள நிலையில் அந்த விவரங்களை மறைத்து தவறான வழக்கு மூலங்களை குறிப்பிட்டும் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் தாவா வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்ககூடியதல்ல என்றும், தள்ளுபடி செய்யகூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் விவசாய நிலங்கள் தவிர வீடு மற்றும் கட்டிடங்கள் உள்ளதா என்றால் உள்ளது. யார் கட்டியது என்றால் தாத்தா கட்டியது. தாவா சொத்தில் உள்ள கட்டிடத்திற்கு உண்டான மதிப்பீட்டிற்கு நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யகூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.